# இலங்கை நீதிபதிகள் நிருவகம்
## இலங்கை நீதிபதிகள் நிருவகத்தில் வெற்றிடமாகியுள்ள பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் இலங்கை பிரஜைகளிடமிருந்து கோரப்படுகின்றன.

**சாரதி பதவி – பதவிகள் 02**

**தகைமைகள்**

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

**<u>வெளிவாரி விண்ணப்பதாரர்கள்</u>**

**கல்வித் தகைமைகள்:**

க.பொ.த (சா/தர) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாது குறைந்தபட்சம் இரண்டு விஷேட சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மற்றும்

கனரக வாகனங்களுக்காக மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் உரிமம் பெற்றிருத்தல் வேண்டும். கனரக வாகன உரிமம் பெற்ற பின்னர் மூன்றாண்டு கால அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.(சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்)

**<u>உள்ளக விண்ணப்பதாரர்கள்</u>**

மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட மோட்டார் வாகன சாரதி உரிமம் பெற்றிருத்தல் மற்றும் சாரதி உரிமம் பெற்றதன் பின்னர் வாகனம் ஓட்டுதல் தொடர்பாக குறைந்தபட்சம் மூன்று (03) வருடகால அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

மற்றும்

முதன்மை அரை-திறன்பெற்ற (PL-2) அல்லது முதன்மை திறன்-பெறாத சேவை பிரிவில் ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

**சம்பள அளவுத் திட்டம்:**
2025.03.25ஆம்'திகதியுடைய முகாமைத்து சேவைகள் சுற்றறிக்கை இல.01/2025 இற்கு ஏற்ப பதவியுடன் தொடர்புடைய சம்பள அளவுத்திட்டம்.

**ரூபாய் 43,280 - 10 X 490 – 10 X 540 – 10 X 590 – 12 X 630 – ரூ. 67,040/- (PL 3 – 2025)**

ஆத்தோடு அத்தகைய சம்பளம் கிடைக்கப்பெறுவது 2027.01.01 இலிருந்தாகும். இந்த சுற்றறிக்கையின் அட்டவணை II இன் ஏற்பாடுகளுக்கு இணங்க பதவி செயற்படுத்தப்படுகின்ற தினத்திலிருந்து சம்பளம் வழங்கப்படும்.

**வயதெல்லை:**

விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படுகின்ற இறுதித்திகதியில் 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். (உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாக மாட்டாது)

**<u>ஒவ்வொரு விண்ணப்பதாரரும்</u>**

I. இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்

II. பதவியின் கடமைகளை சிறப்பாகச் செய்வதற்கும், தீவின் எந்தப் பகுதியிலும் பணியாற்றுவதற்கு உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் தகுதி பெற்றிருக்க வேண்டும்.

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

III. சிறந்த நன்னடத்தையைக் கொண்டவராக இருக்க வேண்டும்.

**ஏனைய அனுகூலங்கள்**

வாழ்க்கைச் செலவுப்படி மற்றும் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

**ஆட்சேர்ப்பு முறை**

மேற்கண்ட அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களின் திட்டமிடப்பட்ட நேர்காணலில் பெற்றுக்கொள்கின்ற புள்ளிகளுக்கு எற்ப ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

**சேவை நிபந்தனைகள்**

இப்பதவி நிரந்தரப் பதவியாகும். இது மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும். மேலும் இப்பதவி ஊழியர் சேமாலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றிற்கு உரித்துடையதாகும். ஊழியர் சேமாலாப நிதியத்திற்கு அடிப்படைச் சம்பளத்தின் 8% ஊழியர் பங்களிப்புச் செய்ய வேண்டும் மற்றும் தொழில்தருனர் 12% பங்களிப்புச் செய்வார் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு தொழில்தருனர் 3% பங்களிப்புச் செய்வார்.

**விண்ணப்ப படிமுறை**

நிறுவனத்தின் இணையத்தளமான http://www.judgesinstitute.lk/ இல் வெளியிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்தை முறையாகப் பூர்த்தி செய்து உரிய சான்றிதழ்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரிதிகளையும் இணத்து கீழ்க் குறிப்பிடப்படுகின்ற முகவரிக்கு **2026/10/31** ஆந்திகதி அல்லது அதற்கு முன்னர் இலங்கை நீதிபதிகள் நிறுவகத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும். விண்ணப்பம் அடங்கிய கடித உறையின் மேல் இடது மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை எழுத வேண்டும். விண்ணப்பங்கள் தபாலிடப்படுகின்ற திகதி அல்லாமல் விண்ணப்பங்கள் நிறுவகத்திற்கு கிடைக்கப் பெறுகின்ற திகதியே செல்லுபடியாகும் திகதியாகக் கருதுவதற்கு நிறுவகத்திற்கு உரிமையுண்டு.

அத்துடன், விண்ணப்பங்களை பதிவுத் தபால் மூலம் அனுப்புவதற்கு மேலதிகமாக, https://judgesinstitute.lk/ என்ற இணையத்தளத்தில் விண்ணப்பிக்கும் பதவிக்கு உரிய இணைப்பின் ஊடாக காணப்படும் கூகள் படிவத்தைப் பூர்த்தி செய்து சமர்ப்பிக்க வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களில் தற்போது சேவையாற்றும் விண்ணப்பதாரர்கள், தமது விண்ணப்பங்களை உரிய திணைக்களத் தலைவர்கள் ஊடாக அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். முறையாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களும், விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும். மேலும், தபாலில் விண்ணப்பங்கள் தொலைந்துவிட்டதாக முன்வைக்கப்படும் எவ்வித முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

பணிப்பாளர்,<br>
இலங்கை நீதிபதிகள் நிறுவகம்,

இலங்கை நீதிபதிகள் நிறுவகம்,<br>
இல. 80 (5வது மற்றும் 6வது மாடிகள்),<br>
அதிகரண மாவத்தை,<br>
கொழும்பு 12

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED